## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை – 2017

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளது 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 29.1 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டிடறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி

இவ்வறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எழும் தாக்கங்களைத் தவிர, ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - அதிகாரசபை

இவ்வறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

### தொடர்புடைய நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தல்

அதிகார சபையின் தற்போதைய தலைவர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளராகப் பணியாற்றுகின்றபோதும் கணக்குகளில் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - அதிகார சபை

### 2.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 01

குறித்த நியமத்தின் 48 ஆம் பந்திக்கு இணங்காதவாறு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மனைகள், சொத்துக்களது அதி கூடிய வைப்புக் கணக்கின் வரவு மீதியாகிய ரூபா 28,779,010 மனைகள், சொத்துக்களது அதி கூடிய வாடகைக் கணக்கின் செலவு மீதியாகிய ரூபா 19,221,684 க்கு எதிரீடு செய்யப்பட்டு நிகர பெறுமதியாகிய ரூபா 9,557,326 நானாவித கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 02**

(i) செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட நிகர காசுப் பாய்ச்சல் கணிப்பிடப்படும்போது மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட ரூபா 340,000 பெறுமதியான நிழற் பிரதி இயந்திரத்தின் பெறுமதி வட்டிக்கு முன்னரான நிகர இலாபத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது.

(ii) நிகர செயற்பாட்டு நடவடிக்கைகளில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் பெற வேண்டிய வித்தியாசத்தைத் தயாரிக்கையில் கொடுப்பனவு செய்ய வேண்டிய வட்டியைப் பதிவழித்தல், குறுகிய கால முதலீடுகள் மற்றும் கையிருப்பு நட்டங்களது ரூபா 327,715,739 கூட்டுத் தொகையுடைய மீதிகள் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(iii) 2018 ஆம் ஆண்டின்போது பணம் செலுத்தப்பட்டிருந்த தளபாடங்களும் பொருத்திகளுமாகிய ரூபா 617,213 மற்றும் ரூபா 273,634 பெறுமதியுடைய உபகரணங்கள் என்பன முதலீட்டு நடவடிக்கைகளாக சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்களது கொள்வனவில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**(இ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(i) பரிமாற்றம் இல்லாத கொடுக்கல் வாங்கல்களின் கீழ் 1987, 1988 ஆம் ஆண்டுகளில் சுவீகரிக்கப்பட்ட ஹன்தான விடுமுறை விடுதிக்குச் சொந்தமான 170.56 பர்ச்சஸ் காணியின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 2,520 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன், நியமத்தின் 27 ஆம் 47 ஆம் பந்திகளின் பிரகாரம் நியாயபூர்வமான பெறுமதியில் அதனைக் கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தைப் பயன்படுத்தத் தயாராகும் நிலை ஏற்பட்டதன் பின்னரே சொத்தொன்றினது தேய்மானமும் ஆரம்பமாக வேண்டுமாயினும், 2017 ஆம் ஆண்டளவில் பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் ரூபா 41,398,583 கூட்டுத் தொகையுடைய அலுவலகக் கட்டிடத்தின் பொருட்டு மீளாய்வாண்டிற்கான தேய்மானம் மேற்கொள்ளப்படாததால் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,024,603 குறைவடைந்திருந்தது.

(iii) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்றினது பயன்படு காலம் ஒவ்வொரு ஆண்டிலும் அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் இறுதித் தினத்தன்று மீளாய்வு செய்யப்பட்டு தேய்மானம் செய்யப்பட வேண்டுமாயினும், அதிகார சபையால் தேய்மானத்திற்குள்ளாகி முடிவடைந்து தற்போது பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் ரூபா 301,608,223 கூட்டுத் தொகையையுடைய சொத்துக்கள் சம்பந்தமாக நியமத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டுக் கொள்கை 9.8 க்கமைய நிலையான சொத்தைச் சுவீகரித்தல், வியாபித்தல், செப்பனிடல் என்பவற்றிற்கான செலவினம் ''மூலதனச் செலவினம்'' ஆக இனங்காணப்பட்டபோதும், கணக்கீட்டுக் கொள்கை 9.5 க்கமைய காணிக்

கடன் கொடுத்தோரின் பொருட்டு வழங்கப்படும் தாமதத்திற்கான வட்டி மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டு சொத்துக்களது கிரயத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதன் மூலம் குறித்த கொள்கைகளுக்கிடையே இணக்கமின்மை ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்கீட்டுக் கொள்கை 5.3 க்கமைய, வரலாற்றுக் கிரயம் அல்லது தேறத்தகு நிகர பெறுமதி ஆகியவற்றுள் எது குறைந்ததோ அக் குறைந்த பெறுமதியிலேயே கையிருப்பு கணிப்பிடப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மனைகளது கையிருப்பில் அடங்கிய 03 மனைகளது கிரயம் மாத்திரம் கருத்திற் கொள்ளப்பட்டு கையிருப்பு கணிப்பிலிடப்பட்டதால் இலாபம் ரூபா 256,502 அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

**2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் செயலகக் கட்டிடத்தின் ix ஆம் மாடியில் உள்ள 7 ஆம் வளாகம் எழுத்து மூல உடன்படிக்கையின்றி இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மாதாந்தம் ரூபா 21,850 வாடகைக்கு அதிகார சபையால் வழங்கப்பட்டிருந்தது. 2008 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இவ்வாடகையானது முறையே ரூபா 31,000 மற்றும் ரூபா 48,960 வீதப்படி மீளாய்வு செய்யப்பட்டிருந்தது. இம் மீளாய்வின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வாடகை நிலுவை ரூபா 1,751,290 ஆகியபோதும் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 556,520 மாத்திரமே கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 12 திறைசேரி உண்டியல்கள் சம்பந்தமாகக் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானமாகிய ரூபா 946,406 கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக் கூற்றுக்களில் காணியானது வேறாகக் கணக்கிலிடப்பட்டிராததுடன், காணி மற்றும் கட்டிடங்களது குறிப்புகளுக்கமைய காணியின் பெறுமதி ரூபா 55,319,710 ஆகக் காட்டப்பட்டபோதும், அதிகார சபையின் நிரந்தர அலுவலகக் கட்டிடம் மற்றும் வாடகைக் கட்டிடம் என்பன அமைந்துள்ள 32 காணித் துண்டுகள், வீடமைப்புத் திட்டங்களில் மேலும் எஞ்சியுள்ள காணி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானதாக இனங்காணப்பட்டிருந்த 437.7 ஹெக்டேயார் காணி என்பன மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) வீடுகளை நிர்மாணிப்பதற்கு விலங்கின வள அமைச்சிடமிருந்து பெறப்பட்டு எஞ்சியிருந்த ரூபா 13,315,764 ஏனைய உதவிகளின் கீழ் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(உ) வெளி நபர்களுக்கு வழங்கப்பட்ட வீடமைப்புக் கடனும், பதவியணியினருக்கு வழங்கப்பட்ட சொத்துக் கடனும் சம்பந்தமாக அதிகார சபை ரூபா 1,225,710,978 கூட்டுத் தொகையைப் பெற வேண்டியிருந்தது. இது அபிவிருத்திச் சொத்தாக நடைமுறை அல்லாச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) விற்பனைக்குள்ள ரூப 7,083,047 பெறுமதியான 09 கூறுகளைக் கொண்ட வீடுகள் 05 ஆண்டுகளுக்கும் அதிகமாகக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக வெளிப்படுத்தல் எதுவுமின்றி அப்பெறுமதி 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(எ) பாக் வீதியில் உள்ள 08 கடைகளின் தேறத்தகு பெறுமதியைக் கணிப்பிடாது அதன் கிரயமாகிய ரூபா 6,100,000 இறுதிக் கையிருப்பாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஏ) நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டினது பற்றாக்குறையில் சிறிய பங்குகளை உடையோரது உரிமை ரூபா 1,256,096 எதிர்மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தபோதும், நிகர சொத்து வேறுபாட்டுக் கூற்றில் அதனை ரூபா 50,818,181 ஆகக் கணக்கிலிட்டமையால் நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புகள் ரூபா 52,074,277 அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

### 2.3.4 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மாவட்ட அலுவலகங்களது 06 நடைமுறைக் கணக்குகளது மீதிக்கும் அவற்றுடனொத்த தலைமை அலுவலக நடைமுறைக் கணக்கு மீதிக்கும் இடையே ரூபா 172,213 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. வேறுபாட்டுக்கான காரணத்தை அறிந்து சீராக்கலைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு திரிபியச கடன் திட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற 06 வங்கியிலிருந்து அதிகார சபை பெற்றிருந்த கடன் மீதி ரூபா 9,418,616 கூட்டுத் தொகையைக் கொண்டிருந்தபோதும், அவ் வங்கிகள் வழங்கிய மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களுக்கமைய அம் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 19,979,190 ஆகவிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட பெறுமதிக்கும் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களுக்குமிடையேயான பெறுமதிகளுக்கிடையே ரூபா 10,560,574 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 51,843,286 ஆகும். எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகார சபையின் கணக்கின் பிரகாரம் வீடமைப்பு அதிகார சபையிடமிருந்து ரூபா 39,837,299 பெற வேண்டிய மீதி உள்ளதாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) உபகாரக கடன் திட்டத்தின் கீழ் 02 வங்கிகளிலிருந்து அதிகார சபை பெற்றிருந்த மீதி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 3,228,445,075 ஆகவிருந்தது. எவ்வாறாயினும், வங்கிகள் வழங்கிய மீதிகளது உறுதிப்படுத்தலின் பிரகாரம் அம் மீதி ரூபா 3,228,401,929 ஆகியமையால் நிதிக் கூற்றுக்களின் பெறுமதிக்கும் வங்கி உறுதிப்படுத்தல் பெறுமதிக்குமிடையே ரூபா 43,146 வேறுபாடு நிலவியது.

### 2.3.6 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கீட்டு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நிறுவன ரீதியான கடன் | 265,182,074 | மீதிகளை உறுதிப்படுத்தல் |
| வேறு மானியங்களின் மூலமான செலவினம் | 131,911,802 | செலவின விபரம் |
| 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் வேறு நிறுவனங்களிலிருந்து பெற்ற மானியம் | 572,238,013 | விரிவான பட்டோலை |
| ஏனைய மானியம் | 637,325,252 | விரிவான பட்டோலையும் துணை ஆவணங்களும் |

## 2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த ஒட்டு மொத்தக் கடன் மீதி (ஐயக் கடனுக்கான நிதியேற்பாட்டுக்கு முன்னர்) ரூபா 4,203,867,692 ஆகும். அக் கடன் மீதியில் 05 ஆண்டுகளுக்கு அதிகமாக முன் கொண்டு வரப்பட்டவாறிருக்கும் பெற வேண்டிய கடன் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 2,132,040,580 ஆகும். அது மொத்தப் பெறுமதியின் 51 சதவீதமாகும்.

(ஆ) அதிகார சபை உள்ளக, வெளி நபர்களுக்குப் பல்வேறு பணிகளுக்குமென வழங்கியிருந்த முற்பணத்தில் 02 ஆண்டுகளுக்கும் அதிகமாக முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் ரூபா 211,300,905 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை ஆண்டின் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 1998 ஆம் ஆண்டில் 60 வீடுகளைக் கொண்ட வீடமைப்புச் செயற்திட்டத்திற்கு தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அதிகார சபை எத்தாவல வத்தையில் உள்ள 685 பர்ச்சஸ் காணியை வழங்கியிருந்தது. இதன் பொருட்டு அதிகார சபை பெற வேண்டிய நிலுவை மீதி ரூபா 448,138 ஆகும். இது மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகார சபையின் ஊழியர்களும் உத்தியோகத்தர்களும் ஏனைய அரச நிறுவனங்களில் கடமையாற்றுவது தொடர்பாக அதிகார சபை பெற வேண்டியிருந்த தொகை ரூபா 72,214,458 ஆகும். அதில் ரூபா 70,963,064 ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்படாதிருந்தது.

(உ) 2010 ஆம் ஆண்டின் திறைசேரி ஒருங்கிணைந்த நிதியத்திலிருந்து பெற்ற தொகை ரூபா 47,462,688 ஆகும். இதனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு திறைசேரிக்கு இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அத்தொகை 05 ஆண்டுகளுக்கும் மேலாக றெ வேண்டிய சொத்தாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) தேசிய இயந்திர சாதன நிறுவனத்தின் பொருட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அதிகார சபை கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த நிலுவை வரியான ரூபா 21,516,177 மற்றும் தண்டப் பணம் என்பவற்றிற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் அதிகார சபை ரூபா 15,329,497 கொடுப்பனவு செய்திருந்தது. எஞ்சிய ரூபா 6,186,680 கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதாகக் கணக்கிலிடப்பட்டபோதும், அத்தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) செயற் திட்டங்களுக்கான 05 தேசிய மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து பெற்ற கடனுக்குச் செலுத்த வேண்டிய கடன் தவணை மீதியாகிய ரூபா 502,242,329 மற்றும் நிலுவையாக உள்ள கடனுக்கான வட்டி ரூபா 207,757,171 என்பன 05 ஆண்டுகளுக்கு மேலாக தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(ஏ) புனரமைப்பு அமைச்சிற்கும் கடற்றொழில் அமைச்சுக்கும் கொடுப்பனவு செய்ய வேண்டிய முறையே ரூபா 130,950,399 மற்றும் ரூபா 89,141,174 ஆகிய கடன் மீதிகள் 05 ஆண்டுகளைக் கடந்து விட்டபோதும், 2017 டிசெம்பர் 31 வரை அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஐ) காணி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு அதிகார சபை ஓசியன் வியூ டெவலப்மென்ட் கம்பனிக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கியிருந்த ரூபா 520,369 கடனை அறிவிடுவதற்கு மீளாய்வாண்டு முடிவு வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகத்தால் கூட்டுறவுக் கடன் சங்க வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் (டீசீசீஎஸ்) வழங்கிய ரூபா 5,973,119 பெறுமதியான 1,468 கடன்களுக்கான வீடமைப்புக் கடன் கோவைகள் தொலைந்து போனமையால் அக்கடனை அறிவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளாது கடன்பட்டோராகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய மொத்தக் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 1,768,665,276 ஆகும். அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,111,328,021 ஆகும். அது ஒட்டுமொத்த கடன்கொடுத்தோரின் 63 சதவீதமாகும்.

(ஔ) ஜப்பானிய உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதிகார சபை பெற்ற ரூபா 11,275,000 பெறுமதியிலான 05 வாகனங்கள் உடன்படிக்கையின்றி 1991 ஆம் ஆண்டு தொடக்கம் அரச பொறியியற் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அவ்வாகனங்களின் மூலம் பெறப்படும் வருமானத்தில் 10 சதவீதம் அதிகாரசபைக்குரியதானபோதும், 2014 டிசெம்பரின் பின்னர் குறித்த வாடகை வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்கவில்லை.

(க) குருநாகலை மாவட்ட அலுவலகத்தின் ஜன உதான காணி விற்பனையின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 13 காணிகளின் 82 துண்டுகளின் பொருட்டு அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த நிலுவை ரூபா 5,020,000 ஆகும்.

(ங) குருநாகலை மாவட்டத்தில் 526 குடும்பங்கள் சூரிய ஒளி மின்சாரத்தை பெறுவதற்கு 1989 – 1994 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடனில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 4,081,632 ஆகும். 2017 ஆம் ஆண்டில் ரூபா 2,950 அறவிடப்பட்டிருந்தபோதும், மேலும், ரூபா 4,078,682 அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும், கடன்பட்டோர் சம்பந்தமாக முறையான நடவடிக்கைகளை அதிகார சபை மேற்கொள்ளவில்லை.

(ச) இரத்தினபுரி – கல்கடுவவத்த எனும் பெயருடைய காணியைச் சுவீகரிப்பதற்கு அதிகார சபை 2012 ஆம் ஆண்டின்போது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 8,686,000 வழங்கியிருந்தது. எனினும், அதனைச் சுவீகரிப்பதில்லை என 2014 ஆம் ஆண்டில் அதிகாரசபை தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கிய தொகையை மீள அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அத்தொகை அபிவிருத்திச் சொத்தாக கணக்கிலிடப்பட்டுமிருந்தது.

(ஞ) கலஹ வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 16 வீடமைப்புக் கூறுகள் தொடர்பாக தொடர்ந்தும் ரூபா 331,276 மீளாய்வாண்டு இறுதியளவிலும் பெறப்படாதிருந்தது. பெற வேண்டிய இம்மீதி தொடர்பான காலப் பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ட) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தில் ரூபா 20,666,249,152 கடன் மூலதன மீதியும் ரூபா 3,150,676,166 கடன்பட்டோர் மீதியும் இருந்ததுடன், இதற்கொப்பாக முன்னைய ஆண்டின் இறுதியில் நிலவிய மீதிகள் முறையே ரூபா 19,340,239,714 மற்றும் ரூபா 3,417,586,436 என்பனவாகும். இக்கடன் மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 1,759,607,179 ஆகும்.

(ண) மீளாய்வாண்டில் கடன் சேகரிப்புக்கான தரகுப் பணமாக ரூபா 151,713,477 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடன்பட்டோரது எண்ணிக்கையில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோரது எண்ணிக்கை 56 சதவீதம் ஆனமையால் பழைய கடனை அறவிடுவதில் நலிவு நிலவியமை அவதானிக்கப்பட்டது.

(த) கடன் அறவீட்டு முன்னேற்றம் தொடர்பான அறிக்கையின் பிரகாரம், ஒட்டு மொத்தக் கடன்பட்டோரின் எண்ணிக்கை 342,668 ஆகும். இதில் சுழற்சிக் கடன்பட்டோரது சதவீதம் ஏறக்குறைய 37 சதவீதமாக இருந்தது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11(பீ) பிரிவு | குறுகிய கால மற்றும் நெடுங்கால முதலீடாகிய ரூபா 3,060,338,089 சம்பந்தமாக நிதி அமைச்சரின் இணக்கம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப் பிரமாணம் 396 | நான்கு மாவட்ட அலுவலகங்களில் வழங்கப்பட்டு, கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 7,190,654 கூட்டுத் தொகையுடைய 245 காசோலைகள் தொடர்பாக குறித்த நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே ஏதாவதொரு விசேட பணியை நிறைவேற்றுவதற்கென முற்பணம் வழங்கப்படலாமெனினும், அதற்கு ஒவ்வாதவாறு அதிகார சபையின் தலைமை அலுவலகம் மற்றும் குருநாகலை மாவட்ட அலுவலகம் என்பவற்றால் 30 சந்தர்ப்பங்களிலும் 37 சந்தர்ப்பங்களிலும் முறையே ரூபா 696,905 மற்றும் ரூபா 432,900 என முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணம் வழங்கப்படும் பணிக்குப் புறம்பானதொரு பணியாகிய எரிபொருள் மற்றும் வாகனப் பழுதுபார்த்தல் ஆகியவற்றிற்கு முறையே ரூபா 75,000 மற்றும் ரூபா 150,000 என வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) 2017 பெப்ரவரி 28 ஆந் திகதிய 04/2017 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | |
| (i) 03 ஆம் பந்தி | குறித்த சுற்றறிக்கைக்கு முரணாக பட்டதாரிப் பயிற்சிப் பயிலுநர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், 2015 தொடக்கம் ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகள் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் பயிற்சிப் பயிலுநர்களாக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். |

| | | |
|---|---|---|
| (ii) | 04 ஆம் பந்தி | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட வரம்பாகிய 25 பயிலுநர்கள் அல்லது மொத்தப் பதவியணியில் 10 சதவீதம் என்பவற்றிற்கு அதிகமாகப் பயிற்சிப் பயிலுநர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். |
| (iii) | 06 ஆம் 08 ஆம் பந்திகள் | பயிலுநர்களது அதி கூடிய பயிற்சிக் காலமாகிய 06 மாதங்களைக் கடந்து பயிற்சி நீடிக்கப்பட்டிருந்தது. |
| (iv) | 07 ஆம் பந்தி | பயிற்சிக் காலத்தின்போது வழங்கப்படக் கூடிய ரூபா 500 க்கு அதிகமாக நாளாந்தப் படியாக ரூபா 1,000 வரை வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஊ) | 2009 செப்டெம்பர் 01 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | அதிகாரசபையின் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் கணனித் துணைப்பாகப் பதிவேடு என்பன நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

-------------------------------

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான தொகுதியினதும் அதிகார சபையினதும் செயற்பாட்டு நடவடிக்கைகளது பற்றாக்குறை முறையே ரூபா 918,590,972 மற்றும் 915,696,741 என்பனவாகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை முறையே ரூபா 366,807,731 மற்றும் ரூபா 240,302,403 என்பனவாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொகுதியனதும் அதிகார சபையினதும் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு முறையே ரூபா 1,285,398,703 மற்றும் ரூபா 1,155,999,144 என்பனவற்றால் நலிவடைந்திருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அதிகார சபையின் காணி விற்பனையிலான வருமானம் ரூபா 823,473,191 குறைவடைந்தும் வீடுகளது விற்பனை வருமானம் ரூபா 131,249,624 குறைவடைந்தும் பொதுசன விழாக்களுக்கான செயற்பாடுகள் மற்றும் கடன் வாடகைச் சேகரிப்புக்கான தரகுப் பணத்திற்கான செலவினம் முறையே ரூபா 19,136,636 மற்றும் ரூபா 68,783,831 என்பனவற்றால் அதிகரித்தும் இருந்தமை மேற்படி நலிவுக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், அதிகார சபையின் நிதிப் பெறுபேற்றில் 2013 முதல் 2014 வரை தொடர் பற்றாக்குறை நிலவியபோதும், 2016 ஆம் ஆண்டின்போது காணி விற்பனை வருமானம் அதிகரித்ததால் ரூபா 240,302,403 மிகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான தேயமானம் என்பவற்றைக் கருத்திற் கொண்டதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 789,016,496 ஆகவிருந்த பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 900,962,457 ஆகியிருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டில் ஊழியர்களது எண்ணிக்கையும் கடன் அறவீட்டினதும் அதிகரிப்புக் காரணமாக ஊக்குவிப்புப் படி 270 சதவீதத்தால் அதாவது ரூபா 62,905,185 அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினது இறுதியில் உள்ளவாறான அதிகார சபையின் நடைமுறை விகிதம் 1.66:1 ஆகும். துரித விகிதம் 1.63:1 ஆகும். முன்னைய ஆண்டில் இவை முறையே 1.64:1 மற்றும் 1.6:1 எனவிருந்தன.

(இ) மீளாய்வாண்டின்போது தகவல்கள் மற்றும் பிரசார செலவினம், கூட்டு ஆதனச் சொத்துக்களை பழுதுபார்ப்பதற்கான செலவினம், மிகையூதியச் செலவினம், வாகன வாடகைச் செலவினம் என்பன 66 முதல் 513 சதவீத அதிகரிப்புக்குள்ளாகியிருந்தன.

**3.3 அதிகார சபைக்கு எதிராக அல்லது அதிகார சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்**

காணி மற்றும் வீடுகளை ஒப்படைப்பது சம்பந்தமாகவும் வீடுகளை நிர்மாணித்தல், பணிக்கொடைக் கொடுப்பனவு மற்றும் வேலை வழங்குதல், ஊழியர் தகராறுகள் என்பன காரணமாக ரூபா 257,180,848 கூட்டுத் தொகைக்கான இழப்பீட்டைக் கோரி 102 வழக்குகள் 102 வெளிநபர்களால் தொடரப்பட்டிருந்தன. அதிகார சபையால் 882 நபர்களுக்கெதிராக வாடகை நிலுவையைச் செலுத்தாமை, காணிச் சுவீகரிப்பு மற்றும் கடனை அறவிடுதல் சம்பந்தமாக ரூபா 62,522,132 இழப்பீட்டைக் கோரி வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 திட்டமிடல்**

இலங்கையிலுள்ள சகல குடும்பங்களுக்கும் மூல வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான வீடுகளை அமைத்துக் கொடுத்தல் அதிகார சபையின் மூல நோக்கமாகும். அதற்குத் தேவையான கசல வசதிகளையும் வழங்கும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் திட்டத்தைத் தயாரித்தவாறும் அவற்றினது சக்தி, நலிவுகள், சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்களை இனங்கண்டவாறும் மீளாய்வாண்டைப் பிரதிநித்துவப்படுத்தும் விதத்தில் கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்து வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினூடாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை எய்துவதற்கு அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும், நாளதுவரையாக்கப்பட்ட நிறுவன ரீதியான திட்டம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, பாதீடு, வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன அச் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 நடவடிக்கைகளும் மீளாய்வும்**

செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பணிகள் மற்றும் எய்திய முன்னேற்றம் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு செவன கிராம நிகழ்ச்சித்திட்டம் மற்றும் குறைந்த வருமான தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முறையே 500 வீடமைப்புக் கூறுகளினதும் 35 வீடமைப்புக் கூறுகளினதும் வேலைகளை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், நீர் மற்றும் அதனுடன் இணைந்த

பிரச்சினைகள் காரணமாக மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு அதில் எந்த வீட்டுக் கூறினதும் வேலை நிறைவேறியிருக்கவில்லை. 2018 மே மாதமளவில் வசிப்பதற்கு ஏற்றவாறான 89 வீடுகள் அமைக்கப்பட்டிருந்தபோதும், அவ்வீடுகளில் நலன் பெறுநர்கள் குடியிருக்கவில்லை.

(ஆ) மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 5,000 கூறு வீடுகளுக்கான வேலை ஆரம்பமாகி மீளாய்வாண்டின்போது அவற்றுள் 3,500 கூறு வீடுகளைப் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தபோதும், அந் நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட காணி தகுதியுடையதாக இல்லாததால் 205 கூறு வீடுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டு அவற்றின் முன்னேற்றம் ஏறக்குறைய 6 சதவீதமாக இருந்தது.

(இ) வட மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் 2,534 கூறு வீடுகள் பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டு இறுதியில் ஏறக்குறைய 27.43 சதவீதமான 695 வீடுகளே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டின் II ஆம் காலாண்டளவில் 726 கூறு வீடுகள் முற்றாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 1,103 கூறு வீடுகள் வசிப்பதற்கு ஏற்றவாறு பூர்த்தியாகியிருந்தன.

(ஈ) பங்குபற்றுதல் விதி முறைகளைக் கடைப்பிடித்து நிர்மாணிக்கப்படும் செவன விசிரி வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 250 கூறு வீடுகளைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், ஆண்டின் இறுதியில் 24 கூறு வீடுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டு முன்னேற்றம் 10 சதவீதம் ஆகவிருந்தது.

(உ) சொந்துறு பியச வங்கிக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 3,000 கூறு வீடுகளைப் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், ஆண்டின் இறுதியில் ஒரு வீடமைப்புக் கூறு மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஊ) வேலை தொடர்ந்தவாறிருக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செவன கிராம வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் 869 கூறு வீடுகளைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், நீர் மற்றும் அதனோடிணைந்த பிரச்சினைகள் காரணமாக நலன் பெறுநர்கள் குடியேறுவதற்கு ஆர்வம் காட்டாமையால் அவர்களது பங்களிப்பை வெற்றிகரமாக பெற முடியாது மீளாய்வாண்டின் இறுதியில் 111 வீடமைப்புக் கூறுகள் பூர்த்தியாகி இருந்தன. இவற்றின் முன்னேற்றம் ஏறக்குறைய 13 சதவீதமாகும்.

(எ) வேலை தொடர்ந்தவாறிருக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான அரச தனியார் பங்களிப்பு வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யக்கல சியனே உயன வீடமைப்புக் கூறுகள் 28 ஐப் பூர்த்தி செய்வதற்கு 2017 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டில் ஒரு வீடமைப்புக் கூறேனும் பூர்த்தியாகி இருக்கவில்லை.

(ஏ) மத்திய தரத்தினர் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் 05 செயற்திட்டங்களினூடாக 3,611 வீடமைப்புக் கூறுகளுக்கான வேலைகளை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மவுண்ட கிளிபர்ட் வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 860 வீடமைப்புக் கூறுகள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(ஐ) சம்பத் செவன விசிரி மற்றும் உதாகல கிராம நிகழ்ச்சித் திட்டம், செமட செவன விசிரி மற்றும் உதாகல கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்த, இலக்கிடப்பட்ட வீடமைப்புக் கூறுகளது எண்ணிக்கையிலும் அதிகமாக முறையே 7,182 மற்றும் 10,943 வீடமைப்புக் கூறுகள் ஆரம்பிக்கப்பட்டமையால் எதிர்பார்த்த இலக்கு நிறைவேறாது போனது. வீடுகள் நிறைவடையும் நிலையிலும் அவற்றில் குடியேறுவதற்கு நலன்பெறுநர்கள் முன்வராத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. அவ்வாறே, செயற்திட்டங்களுக்கான மொத்த மதிப்பீட்டு நிதியேற்பாடு மற்றும் நிதியேற்பாட்டில்

பெருமளவு வீடமைப்பதற்கான முதற்கட்ட வேலைகளுக்கே பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஓ) 2017 ஆம் ஆண்டில் பழைய வீடமைப்புத் திட்டங்களைப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 250,000,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன், பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் முடிவடைய வேண்டியபோதும், 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 18 வீடமைப்புத் திட்டங்களில் மாத்திரமே பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் அமுலாகியிருந்ததுடன், அதற்கென ரூபா 170,000,000 செலவழிக்கப்பட்டுமிருந்தது.

(ஓ) வீடமைப்புச் செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கான காணியைத் தெரிவு செய்யும் போது நீர் மற்றும் சுகாதார வசதிகள் உள்ளதாகவும் நலன்பெறுநர்களது தெரிவின்போது நலன்பெறுநர்களது நிதி நிலைமை எவ்வாறு உள்ளது என்பது என்பனவெல்லாம் கருத்திற் கொள்ளப்படாமையால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் அதிகரித்தபோதும் அதற்கொப்பாக அவற்றைப் பயன்படுத்தும் நலன்பெறுநர்களின் எண்ணிக்கை அதிகரித்திராமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) உபகார கடன் உடன்படிக்கைப் பிரகாரம், கடனாளியின் சம்பளத்திலிருந்தோ பிணையாளியிடமிருந்தோ அறவீடுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடு இருந்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 292,679,982 நிலுவையாக இருந்தது. இந்த உபகார கடன் நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்குவதற்கு அதிகார சபை அரச வங்கிகளிலிருந்து கடன் பெற்றிருந்ததால் கடன்பட்டோரிடமிருந்து பணத்தைப் பெறாதபோதும் குறித்த தவணைப் பணத்தையும் வட்டியையும் குறித்த தினத்தில் வங்கிகளுக்கு அதிகார சபை செலுத்த வேண்டியேற்படுவதால் அதிகார சபையின் சாதாரண நடவடிக்கைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பணம் இதன் பொருட்டுச் செலவிடப்பட வேண்டியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) செவன ஊடகக் கூறு

(i) அமைச்சு மற்றும் இணைந்த நிறுவனங்களில் விளம்பரங்களைப் பிரசாரம் செய்வதன் மூலமாக வருமானத்தை ஈட்டும் நோக்குடன் ஏறக்குறைய 30 ஆண்டுகளாக செவன ஊடகக் கூறு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் சாதாரண செயற்பாடுகளுக்குப் புறம்பாக நடைபெறும் இவ் விசேட செயற்திட்டம் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 23,222,353 கடன்பட்டோரும் ரூபா 4,574,501 கடன் கொடுத்தோரும் ரூபா 13,188,566 வருமானமும் இறுதிக் கணக்குகளில் நிரூபணமாகியபோதும், செவன ஊடகக் கூறுடன் தொடர்புடைய கணக்கீட்டுத் தொகுப்பை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கவோ அல்லது இவ்விடயங்கள் சம்பந்தமாக கணக்குகளைப் பரிசீலிப்பவர்களுக்கு உணர்த்துவதற்கோ ஏதேனும் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள அதிகார சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

(ii) இவ்வூடக நடவடிக்கையின் ஊடாக விளம்பரங்கள் பிரசுரிக்கப்படும்போது பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முறையான விதிமுறைகள் தயாரிக்கப்படாததுடன், கடன்பட்டோருக்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்களது பிரதிகள் மற்றும் அவற்றுடன் இணைந்த தகவல்களை முறையாக பேணுவதற்குத் நடவடிக்கை எடுக்காமையால் முன்னைய கடன்பட்டோரிடமிருந்து பணத்தைப் பெற முடியாது போனமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(iii) வேலை வழங்குநர்களால் இன்வொய்சில் குறிப்பிடப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் செவன ஊடகக் கூறுக்குக் கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டுமாயினும், ஊடகக் கூறு இன்வொய்சுகளை வழங்குவதில் ஒரு மாதத்திற்கும் அதிகமாக தாமதித்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(iv) செவன ஊடகக் கூறின் பொருட்டு தயாரிக்கப்பட்ட கணனி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பரிசீலனை வழிகாட்டிக் கைநூல் ஒன்று தயாரிக்கப்படாமையால் கணனி நடவடிக்கைகளை ஊடகக் கூறில் நிறைவேற்றுவது இயலாதிருந்தது.

(ஆ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபைக்குச் சொந்தமான ரூபா 99,071,242 பெறுமதியான வீடமைப்புக் கையிருப்புகளில் ரூபா 33,952,205 பெறுமதியான ஒதுக்கப்பட்ட வீடுகள், எஞ்சிய வீடுகள், மற்றும் கடைகள் என்பன 05 ஆண்டுகளுக்கு மேலாக வீடமைப்புக் கையிருப்பில் இருந்து வருவதுடன், ஒதுக்கப்பட்ட வீடுகளின் பொருட்டுப் பெற வேண்டிய நிலுவைத் தொகையை அறவிடுவதற்கும் கையிருப்பில் உள்ள ஏனைய வீடுகளையும் கடைகளையும் துரிதமாக விற்பனை செய்வதற்கும் அதிகார சபை முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) விற்பனை செய்யப்படும் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெறாது 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதியாகிய ரூபா 192,942,000 ஐ அடிப்படையாகக் கொண்டு 2015 யூலை 17 ஆந் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பேரில் கழிவுடன் 2012 முதல் 2016 வரை லெவன்கொல்லவத்தையில் உள்ள 20 வீடுகள் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(ஈ) ரிதீகம – பொரலுவல மாதிரிக் கிராமத்தை பள்ளத்தாக்கான இடத்தில் அமைத்தமை, தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட இடர்கள் தொடர்பான குறிப்புகளுக்கமைய நடவடிக்கை எடுக்காமை, வீடுகளைப் பெறும் நலன்பெறுநர்கள் சரிவர அறிவுறுத்தப்படாமை என்பன காரணமாக அக்கட்டிடமும் அத்திவாரமும் இடர்களுக்கு உள்ளானதும் அதற்கமைய அதிகார சபையின் நிதியின் மூலம் அதி கூடிய பயனைப் பெறத் தவறியமையும் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(உ) வேபத்அங்க – கல்பாமுலஹேன மாதிரிக் கிராமச் செயற்திட்டம் கடன் செயற்திட்டமாக அறிமுகஞ் செய்யப்பட்டிருந்தபோதும், கடனைப் பெறுவதற்கு நலன்பெறுநர்கள் முன்வராததால் அது உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டமாக மாற்றமடைந்திருந்ததுடன், அதற்கான முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம் இந்த 14 வீடமைப்புச் செயற்திட்டம் 2017 ஒக்டோபர் மாதத்தில் முடிவடைய வேண்டுமாயினும், மீளாய்வாண்டு இறுதியிலும் 03 வீடுகளது வேலைகளே நிறைவேறியிருந்தன.

(ஊ) செயற்பாட்டு வாடகைக் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் 2017 பெப்ரவரியில் 18 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 38,488,899 வாடகைக் கொள்வனவுக்கான வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வாகனங்களுக்கான வாடகையின் பொருட்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 84 சதவீதமான ரூபா 49,124,477 வாடகைச் செலவினம் அதிகரித்திருந்தது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

அதிகார சபை தனது துணைக் கம்பனியில் ரூபா 120,000,000 முதலீடு செய்திருந்தது. எனினும், துணைக் கம்பனிகளது கணக்குகளின் பிரகாரம் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 306,351,250 மற்றும் ரூபா 126,505,328 வரியின் பின்னரான இலாபம்

கணக்குகளில் காட்டப்பட்டிருந்தபோதும், 2013 ஆம் ஆண்டின் பின்னர் அதிகார சபை பங்கிலாபம் எதனையும் பெற்றிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், துணைக் கம்பனியில் வரியின் பின்னரான இலாபமாக ரூபா 84,962,545 காட்டப்பட்டிருந்தது.

**4.4 குறைவான நிதியப் பயன்பாடு**

மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த ரூபா 523,866,086 மீதி உள்ளடங்கலாக செவன நிதியத்திற்காக திறைசேரியிடமிருந்தும் வேறு நபர்களிடமிருந்தும் ரூபா 903,976,375 பெறப்பட்டபோதும், நிதியத்தின் நோக்கத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 70,385,977 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**4.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பெறுமதி குறிப்பிடப்படாத 397 வகை மோட்டார் வாகனங்களது 2,731 உதிரிப் பாகங்கள் 2007 முதல் பயன்படுத்தப்படாதிருந்தன.

**4.6 இனங்காணப்பட்ட இழப்புகள்**

2006 முதல் 2012 வரை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியக் கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் உரிய சம்பள அளவுத் திட்டத்திற்குக் குறைவான சம்பளத்தில் பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டமையால் மீளாய்வாண்டில் அதன் பொருட்டு ரூபா 71,926,950 தண்டப் பணமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன், அக்காலப்பகுதியின் பொருட்டுக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 143,853,900 தவணைப் பணமும் தண்டப்பணக் கணக்கிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது.

**4.7 முறையாக சுவீகரிக்கப்படாத காணிகளில் செயற்திட்டத்தை ஆரம்பித்தல்**

அதிகார சபை சுவீகரிக்காத காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மஹவ உதாகம மாதிரிக் கிராமத்தில் 07 உத்தியோகபூர்வ மனைகள் வெளி நபர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு 2017 யூன் 30 தொடக்கம் இவற்றிலிருந்து ரூபா 1,346,105 வாடகை நிலுவை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், இம்மனைகளது வாடகை உடன்படிக்கைகளை நாளதுவரையாக்கவும் அவற்றை முறையாகப் பராமரிப்பதும் நடைபெறாதிருந்தது.

**4.8 பதவியணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் 2012 ஏப்ரல் 04 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணி 1,376 ஆகும். எனினும், மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினது உள்ளவாறான எண்ணிக்கை 2,264 ஆகவிருந்தது. இதனால் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விட எண்ணிக்கை 896 அதிகரித்திருந்தது. 2014 முதல் பதவியணி மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் என்பன அதிகாரசபையால் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தபோதும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறிப்பிட்ட ஆட்சேர்பு நடைமுறைகளின் பிரகாரம் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு மேலதிகமாக அங்கிகரிக்கப்படாத 28 பதவிகளில் 238 உத்தியோகத்தர்கள் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி சேவையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1(vii) ஆம் பிரிவுக்கு முரணாக 18 உத்தியோகத்தர்கள் 03 மாதங்கள் தொடக்கம் ஓராண்டு வரை பதில் கடமை பார்க்கும் பதவிகளில் ஈடுபட்டிருந்தனர்.

(ஈ) அதிகார சபையின் வருடாந்த இடமாற்ற விதிமுறைகளுக்கு ஏற்றவாறு இடமாற்றம் அமுலாகியிருக்கவில்லை. தெரிவுச் செவ்வைகளின் பிரகாரம், சில உத்தியோகத்தர்கள் 17 ஆண்டுகளாக ஒரே மாவட்ட அலுவலகத்தில் பணியாற்றி வருவதுடன், இவ்வுத்தியோகத்தர்கள் உள்ளக பிரிவுகளுக்கிடையே இடமாற்றத்திற்குள்ளாகாதுமிருந்தனர்.

(உ) அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இசையாதவாறு 2017 ஆம் ஆண்டில் ஒப்பந்த மற்றும் நிரந்தர அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஊ) அதிகார சபையில் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் பணியாற்றியபோதும், அப்பதவி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2017 ஆம் ஆண்டில் வெற்றிடங்கள் சம்பந்தமாக விளம்பரங்கள் பிரசுரிக்கப்படாது ஒப்பந்த அடிப்படையில் உதவிக் கணக்காளர் (சொத்து முகாமைத்துவம்) பதவிக்கு அரைப் பங்கு அரச நிறுவனமாக இயங்கும் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய உத்தியோகத்தர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். அவரது ஒப்பந்த காலத்தின்போது பிரதிப் பொது முகாமையாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு அவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையிலிருந்து விலகியவாறும் முறையான நேர்முகப் பரீட்சையின்றியும் குறித்த உத்தியோகத்தர் பிரதிப் பொது முகாமையாளராக நிரந்தர நியமனம் பெற்றிருந்தார். 2017 ஏப்ரல் 24 ஆந் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின்படி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உதவிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்) பதவிக்கு 2017 பெப்ரவரி முதல் 2017 யூலை வரை மாதாந்தம் ரூபா 22,370 விசேட சீராக்கல் படியாக ரூபா 134,220 கூட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) 2017 ஆம் ஆண்டில் பிரசித்த விளம்பரமின்றியும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிடப்பட்ட தகைமையும் இல்லாது பணிப்பாளர் சபையினது தீர்மானத்துடன் உதவிப் பொது முகாமையாளர் (மனிதவள முகாமைத்துவம்) பதவிக்கும் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

**4.9 வாகனப் பாவனை**

-----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகார சபைக்குச் சொந்தமான ரூபா 1,940,000 பெறுமதியான 13 வாகனங்கள் போர் நடைபெற்ற காலத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களில் தொலைந்து போயிருந்தன. அது தொடர்பான பரிசீலனைகளை மேற்கொண்டு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகார சபை தவறியிருந்தது.

(ஆ) மோட்டார் வாகனங்களது பயன்தரு காலம் 05 ஆண்டுகள் எனக் கருதி அவற்றை கணக்கிலிடுவது நிறுவனத்தின் கொள்கையாக இருந்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 10 முதல் 32 ஆண்டுகள் பழமை வாய்ந்த 64 வாகனங்கள் அதிகார சபையால் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. இதனால், மோட்டார் வாகனங்களதும் அதனோடிணைந்த செலவினமும் வருடாந்தம் அதிகரித்தவாறிருந்தது.

(இ) 1985 முதல் 1993 வரை கொள்வனவு செய்யப்பட்ட 04 வாகனங்களும் 03 மோட்டார் சைக்கிள்களும் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டில் விற்பனைக்கான அறிவித்தல் புதினப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தபோதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாகனங்கள் கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டினது ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் கசல அரச நிறுவனங்களும் செயலாற்ற வேண்டுவதுடன், மீளாய்வாண்டில் வீடமைப்பு அதிகாரசபை சகலருக்கும் நிழல் எனும் மூல நோக்கத்துடன் சுற்றாடலுடனொத்த, செழிப்பான, தரமான மற்றும் நிரந்தர பாதுகாப்புடனான, மூல வசதிகளுடன் கூடிய வீட்டில் வசிக்கும் உரிமையை உறுதி செய்வதை இனங்கண்டுகொண்டிருந்ததுடன், அப்பரப்பெல்லைக்குள் வரும் ஏனைய நோக்கங்களான வீடமைப்பு மற்றும் செப்பனிடல் என்பவற்றிற்கான கடன் மற்றும் உதவிகளை வழங்குதல், வீடமைப்புக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல், குடியிருப்பாளரது உரித்தைப் பாதுகாப்பது போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்தது.

(ஆ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அமுலாக்குவது சம்பந்தமான அதிகார சபையின் கடமைகளில் ஈடுபாடு உடையவர்களை இனங்கண்டு, குறித்த இலக்கைத் தயாரிக்கையில் பங்குபற்றுவர்களது பிரவேசம் நிரூபணமாவது அவதானிக்கப்பட்டபோதும், அப்பங்குபற்றலினால் ஏற்படும் வெற்றி வாய்ப்புகள் குறைந்த மட்டத்திலேயே இருந்தன.

(இ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கை அடையப்பெற்றதை அளவிடுவதற்கு அதிகார சபை செயலாற்றல் சுட்டிக்காட்டிகளை உருவாக்கியிருந்தபோதும், அதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் அமுலாக்குதல் என்பன முறையாக நடைபெறவில்லை

(ஈ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கை அடைவதற்காக நிறுவனம் இலக்கிட்ட பணிகளை இனங்கண்டு அவற்றை வருடாந்தத் திட்டத்தில் உட்சேர்க்கவில்லை.

(உ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கை அடைவதற்குத் தயாராகும்போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பைக் கொண்டிராமையால் இலக்கை அடைதலுக்கான திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் முன் கூட்டியே தயாராகுதல் ஆகிய நடவடிக்கைகள் நலிவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

2006 அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபை 03 ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் பொருட்டு கொள்வனவு நடவடிக்கைகள் அடங்கலாக பிரதான பொருட் கொள்வனவுத் திட்டம் மற்றும் அடுத்து வரும் ஆண்டிற்கான விரிவான பொருட் கொள்வனவுத் திட்டம் என்பவற்றைத் தயாரித்திருக்கவில்லை. மீளாய்வு செய்யப்பட்ட பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரிக்காது 2017 ஆம் ஆண்டில் பொருட் கொள்வனவுத் திட்டத்தில் அடங்காத ரூபா 6,300,000 செலவிலான கெப் வண்டி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

அதிகார சபை சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம், செலவினம் என்பவற்றிற்கு இடையே 32 முதல் 2538 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவியமையால் பாதீடானது ஆக்கப்பூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6.3 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

அதிகார சபை 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை 2018 மே 31 ஆம் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன் வைத்திருக்கவில்லை.

## 6.4 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகார சபைக்குச் சொந்தமான லிபர்ட்டி பிளாஸா சுற்றுலா பங்களா ஓசன்வியூ டெவலப்மன்ட் கம்பனிக்கு விற்பனை செய்யப்படுகையில் அரசாங்க விலை மதிப்பீட்டாளரின் பெறுமதி பெறப்படாது அதிகார சபையின் விலை மதிப்பீட்டாளரது விலை மதிப்பீடு மாத்திரமே பெறப்பட்டிருந்தது. இச் சொத்தின் பொருட்டு பின்னர் அரசாங்க விலை மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட விலை மதிப்பீடு ரூபா 11,520,000 ஆகும். எவ்வாறாயினும், விற்பனை விலை ரூபா 9,000,000 ஆகவிருந்தது. இது 2012 நவம்பர் 23 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுவின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1999 செப்டெம்பர் 11 ஆந் திகதிய 99/1165/21/122 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி அனுமதியின்றிக் குடியேறியவர்களை முறைப்படி குடியமர்த்துகையில் தற்போதைய மதிப்பீட்டின் அடிப்படையில் அதனை மேற்கொள்ள வேண்டுமாயினும், அதற்கு அமையாதவாறு அதிகார சபை அவ்வப்போதைய பணிப்பாளர் சபைத் தீர்மானம் மற்றும் உள்ளகச் சுற்றறிக்கைகளின் அடிப்படையில் அதிகார சபைக்குச் சொந்தமான வீடுகள், காணிகள், கடைகள் என்பவற்றை அனுமதியின்றிக் குடியிருந்தோருக்கு அவர்கள் குடியேறிய ஆண்டினது மதிப்பீட்டில் ஒப்படைத்திருந்தது. விபரம் வருமாறு,

(i) 2015 ஆம் ஆண்டில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வன்னிகம வர்த்தக கூட்டுத் தொகுதியின் கட்டிட உரித்து அனுமதியின்றிக் குடியேறியவர்களுக்கு 1998 ஆம் ஆண்டின் மதிப்பீடாகிய ரூபா 257,500 க்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டில் கம்பஹா வேவல்தூவ வீடமைப்புத் திட்டத்தில் உள்ள காணியின் 3 பிரிவுகள் 2000 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதியான 2,227,501 (நிர்வாகக் கட்டணம் அடங்கலாக ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக்காணிப் பிரிவுகளது 2011 ஆம் ஆண்டினது மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 6,000,000 ஆகும்.

(iii) 2014 ஆம் ஆண்டின் ரூபா 13,800,000 க்கு மதிப்பீடு செய்யப்பட்ட மெனிங்டவுன் வீடமைப்புத் திட்ட வீடு ஒன்று 1998 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 3,700,000 க்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(இ) 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கு இணங்காதவாறு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஒரே நபருக்கு மத்தேகொட மற்றும் மெனிங் டவுன் வீடமைப்புத் திட்டங்களில் 2 வீடுகளை வழங்கியிருந்தது. எனினும், அச் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டு இறுதியிலேனும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் மாடி மற்றும் I,II,III,IV,V ஆம் மாடிகளில் 27,184 சதுர அடி இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு வாடகைக்கு வழங்கப்படுகையில் அரசாங்க விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீடு பெறப்படாமை மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமை என்பவற்றின் அடிப்படையில் அதிகார சபை இழப்புடன் பிரச்சினைகளுக்கு உள்ளாகியபோதும், அதிகாரச் சட்டத்தின் 8.1 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதும் அரசாங்க விலை மதிப்பீட்டாளரது விலை மதிப்பீட்டைப் பெறாதும் இக் கட்டிடத்தின் IX ஆம் மாடியில் 3 ஆம் 4 ஆம் நிலப் பரப்பு 2015 ஆம் ஆண்டில் குறித்த வங்கிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந் நிலப்பரப்புக்கு அதிகார சபையின் விலை மதிப்பீட்டாளர் மற்றும் விலை நிர்ணயக் குழுவால் தீர்மானிக்கப்பட்ட வாடகை ரூபா 80,700 ஆகியபோதும், இரு நிறுவனங்களதும் இணக்கத்துடன் மாதாந்த வாடகையாக ரூபா 54,500 வழங்கப்படுவதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு அமையாதவாறு 2011 ஆம் ஆண்டின் பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்) பதவிக்கான வெற்றிடத்தை நிரப்பி சம்பள ஏற்றத்தை வழங்கியமை சம்பந்தமாக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 38 (ஆ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபை தனதுடைமையாக்கிய 72 காணித் துண்டுகளைச் சுவீகரிப்பதற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய இழப்பீடாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 172,770,166 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 38 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த மீதிகளை உள்ளடக்கியவாறான அந்த இழப்பீட்டையும் வட்டியையும் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டவில்லை.

(எ) வீடமைப்புத் திட்டங்களை அமுலாக்குவதற்கு முன்னர் குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் திட்டங்களை அங்கீகரித்துக் கொள்ளாமையால் இசைவுச் சான்றிதழைப் பெறாது, வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளை வீட்டுரிமையாளர்களுக்கு வழங்கி முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தை அமைப்பதற்கு இயலாது போனமை காரணமாக கூட்டுத்தொடர் சொத்துக்களது மாடி வீடுகளதும் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் அதிகாரசபையையே சார்ந்திருந்தது. அதற்கமைய, அந்த வீடமைப்புத் திட்டங்களது பராமரிப்பும் பழுதுபார்த்தலுக்குமான நடவடிக்கைகள் தொடர்பான மீளாய்வாண்டின்போது ரூபா 230,482,683 கூட்டுத் தொகையை அதிகாரசபை செலவிட வேண்டியிருந்தது.

(ஏ) கண்டி மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் அதிகாரசபை நிர்மாணித்த 32 வீடுகளை உடைய மஹய்யாவ வீடமைப்புச் செயற்திட்டத்திற்கு ரூபா 20,000,000 நிர்மாணக் கிரயம் ஏற்பட்டதுடன் அதற்குரிய தொகை கண்டி மாநகர சபையிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) முற்பணக் கட்டுப்பாடு | (i) முற்பணப் பதிவேடு பேணப்படாமை மற்றும் செலவின மதிப்பீடு செய்யப்படாமல் முற்பணம் வழங்கப்படுதல். |
| | (ii) முற்பணத்தைத் திருப்பிச் செலுத்துவதில் தாமதம் மற்றும் முன்னர் பெற்ற முற்பணத்தைப் பெறுவதற்கு முன்பே மீண்டும் அதே உத்தியோகத்தருக்கு முற்பணத்தை வழங்குதல். |
| (ஆ) சொத்து முகாமைத்துவம் | (i) பொருட் கணிப்புச் சபையை அமைப்பதில் தாமதம் மற்றும் பொருட் கணிப்பு நடவடிக்கைகளை முடிவு செய்வது மற்றும் குறைவு தொடர்பாக முறையான நடவடிக்கை மேற்கொள்ளாமை. |
| | (ii) காணி மற்றும் உத்தியோகபூர்வ மனைகள் முறையாக பராமரிக்கப்படாமை மற்றும் பயன்படுத்தப்படாமை. |
| (இ) செயற்பாட்டு முகாமைத்துவம் | தற்போதுள்ள பொருளாதாரப் பெறுமதியின் அடிப்படையில் வாடகையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) காசும் வங்கியும் | பெறுவனவுகளை வங்கியிலிடுவதில் தாமதம் மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை நாளதுவரையாக்கித் தயாரிக்காமை |